# விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-1, இதழ்-11, ஆகஸ்ட் 2008 | ஒரு மடலின் விலை - Rs.2.50 | விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிகை | ஆண்டு சந்தா - Rs.30 | தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு

[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், ச.நா.கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]

## உலக பொதுவான தம்ம பாதை

திரு ச. நா. கோயங்கா

*(கீழ்வருவது, ஜீ டிவி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட திரு ச.நா.கோயங்கா அவர்கள் ஆற்றிய ஒரு இந்தி மொழி சொற்பொழிவின் தமிழாக்கம்)*

தம்மம் முழுமையும் சீல, ஸமாதி, பஞ்ஞா ஆகியவற்றுள் அடங்கும். தம்மத்தின் முழு அர்த்தமும் அவற்றுள் அடங்கியிருக்கிறது. தம்மத்தின் தூய்மை அவற்றுள் அடங்கியிருக்கிறது. சீலத்தைப் பின்பற்றுவது என்றால் நன்னடத்தை மிகுந்த வாழ்க்கையை வாழ்வது என்றாகும். நன்னடத்தை மிகுந்த வாழ்க்கையை வாழ, நாம் ஸமாதியைப் பயிற்சி செய்யவேண்டும்; அதாவது மனதின் மேல் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதுமட்டுமின்றி, மனதின் ஆழங்களில் சேர்ந்துள்ள அசுத்தங்கள் அனைத்தையும் நாம் அழித்தொழிப்பதன் மூலம், இயல்பாகவே - தனி முயற்சி எதுவும் தேவைப்படாமலே -- நன்னடத்தை நம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகவேண்டும்.

ஒருவர் மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும்; ஒருவர் மனதின் அசுத்தங்கள் யாவையும் அழித்தொழிக்க வல்ல நுண்ணறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். நன்னடத்தைக் கொண்ட வாழ்க்கையை வாழ்தல், மனதின் மேல் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ளுதல், மேலும், மனதை முழுமையாகத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல் ஆகியவை எந்தவொரு நாட்டிற்கோ, மதத்திற்கோ, சமூகத்திற்கோ, பிரிவிற்கோ அல்லது சாதிக்கோ சொந்தமான தனிப்பட்ட தம்மம் இல்லை. இது எல்லோருக்கும் பொதுவான தம்மம். தம்மம் உலகப் பொதுவானது. இதுவே தம்மத்தின் உண்மையான இயல்பு. இதுவே தம்மத்தின் மிகப்பெரியப் பொதுத்தன்மை. நன்னடத்தைக் கொண்டு வாழ்வது நன்மை நிறைந்தது, மனதை ஒருநிலைப்படுத்தி அதன் மேல் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்வது நன்மை நிறைந்தது, மனதை முழுமையாகத் தூய்மைப்படுத்த வல்ல ஒரு செயல்முறையைக் கற்றுக்கொள்வது நன்மை நிறைந்தது என்பதை எந்தவொரு வழிமுறையைப் பின்பற்றும் எவரும் ஒத்துக்கொள்வார்கள். அத்தகைய தம்மம் அனைவராலும் ஒத்துக்கொள்ளக்கூடியது.

தம்மம் அனைவருக்கும் பொதுவானது. ஒருவர் தன்னை எந்த பெயரிட்டு வேண்டுமானாலும் அழைத்துக்கொள்ளட்டும். அதனால் எந்த வேறுபாடும் கிடையாது. ஒருவர் குறைந்தபட்சம் சீலத்தைப் பின்பற்றி, ஸமாதியைப் பயின்றுவந்து, பஞ்ஞாவை வளர்த்துக்கொள்ளட்டும். அப்படிப்பட்டவரே உண்மையான தம்மம் நிறைந்த மனிதர்.

தம்மத்தைப் பின்பற்றுவதால், ஒரு இந்து நல்ல இந்துவாக ஆகிறார்; ஒரு பௌத்தர் நல்ல பௌத்தராக ஆகிறார்; ஒரு சமணர் நல்ல சமணராக ஆகிறார்; ஒரு கிறிஸ்துவர் நல்ல கிறிஸ்துவராக ஆகிறார்; ஒரு இஸ்லாமியர் நல்ல இஸ்லாமியராக ஆகிறார்; ஒரு பாரசீகர் நல்ல பாரசீகராக ஆகிறார்; ஒரு யூதர் நல்ல யூதராக ஆகிறார். ஒருவர் நல்ல மனிதராக ஆகிறார்.

தம்மம் நம்மை நல்ல மனிதர்களாக ஆக்குகிறது. ஒருவர் தம்மை என்ன பெயரிட்டு அழைத்துக்கொண்டாலும், அதனால் எவ்வித வேறுபாடும் கிடையாது. பெயரில் அப்படி என்னதான் இருக்கிறது? தம்மம் நம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகவேண்டும். சீல, ஸமாதி, பஞ்ஞா ஆகியவை நம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகவேண்டும். சீல, ஸமாதி, பஞ்ஞா ஆகிய இந்த மூன்றும் அக்காலத்து மொழியில் விரிவாக விவரிக்கப்பட்டன. சீல, ஸமாதி, பஞ்ஞா வழியில் நடக்கும் ஒருவரை 'அரியோ', அதாவது சான்றோர், என்று அழைத்தனர். இந்தப் பாதை 'அட்டாங்கிக மக்கோ', அதாவது 'எண்வழிப் பாதை' என்று அழைக்கப்பட்டது. அரியோ அட்டாங்கிக மக்கோ' என்றால் 'புனித எண்வழிப் பாதை' என்று பொருள்படும்.

அரிய யாரைக் குறிக்கும்? 2500 ஆண்டுகள் என்பது ஒரு நீண்ட காலம். 2500 ஆண்டுகளில் மொழி மாறுகின்றது, வார்த்தைகள் மாறுகின்றன, வார்த்தைகளின் அர்த்தங்கள் மாறுகின்றன. இன்று, அரிய என்னும் வார்த்தை ஒருவரின் இனத்தைக் குறிக்கும் பொதுச் சொல்லாக மாறிவிட்டது. பழங்காலத்தில் அது ஒருவரின் இனத்தைக் குறிக்கும் சொல்லாக இருக்கவில்லை; அது ஒருவரின் குணங்களைக் குறிக்கும் பண்புப்பெயராக இருந்தது. அரிய என்று யாரை அழைக்கப்பட்டது? ஒருவர் புனிதராக, தம் மனதை முழுமையாகத் தூய்மைப்படுத்தியவராக, தூய இதயம் கொண்டவராக, நன்னெஞ்சம் கொண்டவராக ஆகியிருந்தால், அவர் அரிய என்று அழைக்கப்பட்டார். அவர் தம்ம பாதையில் நடந்து, மனம் முழுவதுமாக தூய்மை அடைய வேண்டி சீல, ஸமாதி, பஞ்ஞா ஆகியவற்றில் நிலைபெறுகிறார்; அவர் வாழ்வு முழுவதும் தம்மம் நிறைகிறது. அப்படிப்பட்டவர் ஒருபோதும் ஒரு தவறான செயலைச் செய்ய முடியாது. பிறரின் அமைதியை, நல்லிணக்கத்தைக் கெடுத்தோ அல்லது பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தச் செயலையும் அவரால் செய்ய முடியாது. அவர் எதைச் செய்தாலும் தமக்கும், பிறருக்கும் நன்மை விளைவிக்கும் செயலையே செய்வார். அவர் நற்செயல்களையே, நன்மைப் பயக்கும் செயல்களையே, செய்வார். அப்படிப்பட்டவரே சான்றோர் என்று, அரிய என்று, அழைக்கப்படுவார்.

ஆனால் இன்று, அரிய என்னும் சொல் ஓர் இனத்தைக் குறிக்கும் பொதுப்பெயராக எடுத்துக்கொள்ளப்படுகிறது. எனவே, ஆரியர் என்றால், உயரமான, சிவந்த மேனியைக் கொண்ட, நீண்ட மூக்கையும், பெரிய கண்களையும் கொண்ட ஒருவர் என்றே சொல்லப்படுகிறது. ஒருவர் கருத்த மேனியைக் கொண்டு, சுருண்ட முடியையும், தடித்த உதடுகளையும் கொண்டு விளங்கினால் அவர் ஆப்பிரிக்க இனத்தவர் என்று சுட்டிக்காட்டப்படுகிறார். மஞ்சள் நிறத் தோலையும், சிறிய கண்களையும், சப்பையான மூக்கையும் கொண்ட ஒருவர் மங்கோலியர் என்று அழைக்கப்படுகிறார். அக்கால வழக்கில், அரிய என்னும் சொல்லிற்கும் ஒருவரின் இனத்திற்கும் எந்த தொடர்பும் இருக்கவில்லை. ஒருவர் சிவந்த மேனி அல்லது கருத்த மேனி கொண்டிருந்தாலும், ஒருவர் நீண்ட மூக்கைக் அல்லது சப்பையான மூக்கைக் கொண்டிருந்தாலும், ஒருவர் பெரிய கண்களை அல்லது சிறிய கண்களைக் கொண்டிருந்தாலும் அதனால் எந்த வேறுபாடும் இல்லாமல் இருந்தது.

இந்தப் பாதையில் நடப்பதன் மூலம் நன்னெஞ்சம் கொண்டவராக ஆன ஒருவர், சீல, ஸமாதி, பஞ்ஞா ஆகியவற்றில் தம்மை நிலைப்படுத்தி, பூரண தூய்மையான மனதை வளர்த்துக்கொண்ட ஒருவர், ஒரு சான்றோர் ஆகிறார். மாறாக, அரிய ஆகாத எவரும் தம்மப் பாதையில் இன்றி தவறான பாதையில் நடப்பவராகவே

இருக்கிறார். அத்தகைய ஒருவர் தமக்குத் தாமே மட்டுமன்றி பிறருக்கும் தீங்கு விளைவிக்கிறார். சிவந்த மேனியைக் கொண்டிருந்தாலும், நீண்ட மூக்கையும், பெரிய கண்களையும் கொண்டிருந்தாலும், அத்தகையவர் அரிய அல்ல. முகத்தோற்றம் ஒருவரை அறிவார்ந்தவராக ஆக்குவதில்லை. அக்காலத்து மொழியில் இவ்வாறு கூறப்பட்டது --

**"ஹினோ கூம்மோ புத்துஜ்ஜனிகோ அனரியோ அனத்தஸங்ஹிதோ"**

அத்தகையவர் இழிவானவர், துயரம் நிறைந்தவர், சான்றாண்மை அற்றவர், கீழ்ப்பிறப்பு கொண்டவர். அவர் இராஜபாதையிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறார். அவர் இருட்டு சந்துகளில் வழிதவறியவராக இருக்கிறார். அவர் இராஜபாதையிலிருந்து தம்மைத்தாமே விலக்கிக்கொண்டுள்ளார்.

**அனத்தஸங்ஹிதோ** - அவர் தமக்குத் தாமே பாவங்களை மட்டுமேச் சேகரித்துக்கொள்கிறார். அவர் தமக்குத் தாமே பாவங்களை சேகரித்துக்கொள்வதோடு, மற்றவருக்கும் துயரத்தை ஏற்படுத்துகிறார். அப்படிப்பட்டவரை அந்தக் காலத்தில் 'அனரியோ' என்று அழைத்தனர். இந்த 2500-ஆண்டு காலத்தில் மொழி மாற்றம் அடைந்ததில் இந்த 'அனரியோ' என்ற வார்த்தை, இக்கால இந்தி மொழியில், அறிவற்றவர் என்று பொருள்படும் 'அனாரி' என்று ஆகிவிட்டது.

அப்படிப்பட்டவர் உண்மையிலேயே அறிவற்றவர்தான். தமக்கும், பிறருக்கும் தீங்கு இழைக்கும் ஒருவர் கண்டிப்பாக அறிவற்றவர்தான். தம்முடைய அமைதியையும், இசைவையும் கெடுத்துக்கொண்டு, பிறரது அமைதியையும் இசைவையும் கெடுக்கும் ஒருவர் எதையுமே புரிந்துகொள்ளவில்லை என்பதால் அவர் அறிவற்றவரே. அவர் தொடர்ந்து அறிவற்றவராக இருக்காமல், தம்ம பாதையில் முன்னேறி தம் நுண்ணறிவை வளர்த்துக்கொண்டால், அவர் மகிழ்ச்சி அடைவதோடு, பிறரது மகிழ்ச்சிக்கும் பங்கு வகிக்கின்றார். அவர் தமக்கும், தம்மைச் சுற்றி இருப்பவர்க்கும் அமைதியையும், இசைவையும் தோற்றுவிப்பதனால், அவர் சான்றாண்மையை நோக்கி இட்டுச் செல்லும் பாதையில் நடக்கத் தொடங்கியிருக்கிறார். இதன் வழியாக நடக்கும் ஒவ்வொருவரையும் நன்னெஞ்சம் கொண்டவராக மாற்றுவதனால், இந்தப் பாதை உன்னத பாதை என்றும், உன்னத தம்மம் என்றும் அழைக்கப்பட்டது.

இந்த எண்வழிப்பாதை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: சீல, ஸமாதி மற்றும் பஞ்ஞா.

உன்னத எண்வழிப்பாதையின் மூன்று பகுதிகள் சீல பிரிவினுள் வரும்: **ஸம்மா-வாசா**, **ஸம்மா-கம்மந்தோ** மற்றும் **ஸம்மா-ஆஜிவோ.**

**ஸம்மா-வாசா** என்றால் நேரிய பேச்சு, வாக்குத் தூய்மை என்று பொருள்படும். நேரிய பேச்சு என்றால் என்ன? சரியான, உண்மையான, பயனளிக்கக்கூடிய, தாம் சொந்தமாகப் பயன்படுத்தியதே நேரிய பேச்சு ஆகும். தம்மம் மிகுந்த பயனளிக்கவல்லது என்று ஒருவர் புத்தகங்களில் படித்திருக்கலாம், ஓர் ஆசிரியரிடமிருந்து கேட்டிருக்கலாம்; ஆனால், உண்மையிலேயே தம்மம் அவர் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக ஆகியிருக்கிறதா? இல்லை என்றால், அதனால் பயன் ஏதும் இல்லை. தம்மத்தின் பயன் நேரிடையாக ஒருவரது சொந்த வாழ்வில் அனுபவிக்கப்பட வேண்டும். எனவே, பேச்சு தகுந்ததாக இருக்க வேண்டும்; அத்தோடு, அது அவரது வாழ்வின் ஒரு பகுதியாகவும் ஆகவேண்டும். அப்பொழுதுதான் அது நேரிய பேச்சாகும்.

நேரிய பேச்சு என்றால் என்ன? பிறருக்குத் தீங்கிழைக்காத, பிறரின் அமைதியையும் இசைவையும் கெடுக்காத பேச்சே நேரிய பேச்சு ஆகும். இதற்கு வேறு அளவுகோல் எதுவும் கிடையாது. ஒருவர் வேறு எவரையும் பொய் சொல்லி ஏமாற்றமாட்டார். கடுஞ்சொல் எதுவும் கூறி மற்றவரைப் புண்படுத்தமாட்டார். பிறரைச் குற்றம் கூறும் வார்த்தைகளைக் கூறவோ, புறங்கூறவோ மாட்டார். இரு நண்பர்களுக்கிடையே சண்டையை ஏற்படுத்தும் வம்புக்கதைகளைப் பரப்பமாட்டார். அவ்வளவே. இத்தகைய தூய்மையற்ற அனைத்து பேச்சுகளையும் தவிர்த்துவிட்டால், நேரிய பேச்சு மட்டுமே - தூய பேச்சு மட்டுமே - மிஞ்சுகிறது. "நேரிய பேச்சு என் வாழ்வின் ஒரு பகுதியாக ஆகி வருகிறதா? நான் நேரிய பேச்சைப் பயின்று வருகிறேனா?" என்று ஒருவர் தன்னைத்தானே ஆராய்ந்துகொண்டே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அது நேரிய பேச்சாக ஆகிறது. இல்லையென்றால், ஏதாவது ஒரு புத்தகத்திலிருந்தோ ஏதோ ஆசிரியரிடமிருந்தோ கிடைக்கப்பெற்ற பயனற்ற உரையாகவே ஆகிறது. தம் வாழ்வின் ஒரு பகுதியாக இது ஆகாதவரை, இதனால் எவருக்கும் பயன் எதுவும் இல்லை. எனவே, ஸம்மா-வாசா என்பது உண்மையாகவே நேரிய பேச்சாக இருக்கவேண்டும்.

**ஸம்மா-கம்மந்தோ** என்றால் நேரிய செய்கை, உடம்பால் செய்யும் செயல்களின் தூய்மை, என்று பொருள்படும். நேரிய செய்கை என்றால் என்ன? ஒவ்வொரு செயலும் மனதிலேயே முதலில் தோன்றுகிறது; அதனைப் பின்தொடர்ந்தே அது பேச்சின் மூலம் வெளிவருகிறது; அது மேலும் முன்னேறி சென்று, உடம்பால் செய்யும் செயலாக வெளிப்படுகிறது. செயலின் இந்த இறுதி வெளிப்பாடான உடல்வழிச் செய்கையே கம்ம (கர்ம) என்று அழைக்கப்பட்டது. இதுவும் நேரியதாக, சரியானதாக, கச்சிதமானதாக இருக்க வேண்டும். இது பிறருக்குத் தீங்கிழைப்பதாகவோ, பிறரது அமைதியையும் இசைவையும் கலைப்பதாகவோ, பிறருக்கு வருத்தம் ஏற்படுத்துவதாகவோ இருக்கக்கூடாது. கொல்லுதல், திருடுதல், தவறான பாலியல் செய்கைகளில் ஈடுபடுதல், போதையூட்டும் பொருள்களை உட்கொள்ளுதல் ஆகியவற்றைத் தவிர்த்து நேரிய செய்கையை ஒருவர் தம் வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்கிக்கொள்ள வேண்டும். ஒருவர் இவ்வாறான செய்கைகளை அறவே செய்யாமல் இருப்பதைத் தம் சொந்த அனுபவத்தில் அறிந்தால், இது நேரிய செய்கை ஆகிறது. ஒருவர் இதைத் தம் வாழ்வில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார். எனவே, இது நேரிய செய்கை.

**ஸம்மா-ஆஜிவோ** என்றால் நேரிய வாழ்வாதாரம் என்றாகும். தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள ஒருவர்க்கு சரியானதொரு வழிவகை இருக்கவேண்டும். இல்லறத்தார் ஒருவருக்கு சரியான ஜீவனத்திற்குரிய தொழில் இருக்கவேண்டும். ஒருவர் தமக்குத் தேவையான உணவு மற்றும் உடைகளை ஏதாவது ஒரு இடத்திலிருந்து எப்படியும் பெறுகிறார். ஆனால், அது எப்படிப் பெறப்படுகிறது? அது ஏதாவது தவறான வழியில், எவரையாவது ஏமாற்றிப் பெறப்பட்டதா? "எது என் தொழில்? நான் வீட்டிற்கு எவ்வாறு செல்வம் ஈட்டி வருகிறேன்? எந்த வேலை அல்லது வியாபாரம் செய்து நான் செல்வம் சேர்க்கிறேன்? அது சரியானதா? அது பிறரை எவ்வகையிலாவது பாதிக்கிறதா? அது பிறரது அமைதியையும் இசைவையும் கலைக்கவோ அல்லது பிறருக்கு எவ்வகையிலாவது வருத்தம் ஏற்படுத்துகிறதா? நான் எவ்வகையிலாவது பிறரை ஒழுக்கமற்ற வாழ்வு வாழத் தூண்டுகிறேனா?" என்று இல்லறத்தார் மட்டுமின்றி, இல்லறத்தைத் துறந்தவரும் தமது தொழிலைப் பகுத்தாராய வேண்டும். அப்படியாக இருந்தால், அப்படிப்பட்டத் தொழிலை ஒருவர் விட்டுவிட வேண்டும். "நான் எந்த உயிரினத்தையும் கொல்லவில்லை" என்று சொல்லி ஒருவர் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளக்கூடும். அது சரியாக இருக்கலாம், ஆனால் அவர் எவ்வகைத் தொழில் புரிகிறார்? அவரது வாழ்வாதாரம் எவ்வழியில் நடக்கிறது? துப்பாக்கி வணிகம் செய்வதின் மூலமாகவா? AK-47 ரகத் துப்பாக்கிகளை எங்கிருந்தாவது கடத்தி வந்து, அவற்றை வன்முறையாளர்களுக்கு விற்றுவிட்டு, "ஓ, அவர்கள்தான் கொல்கிறார்கள்; நான் இல்லை" என்று அவர் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்கிறாரா? ஒருவர் போர்க்கருவிகள், துப்பாக்கிகள், துப்பாக்கிக் குண்டுகள் இவற்றை விற்று வந்தபோதிலும், தம்மை ஒரு புனிதமானவர் என்று கருதிக்கொள்கிறார். ஓ, இல்லை! அது ஒரு தவறான பிழைப்பு; மக்கள் சரியான நடத்தைக் கொண்டு வாழ்வதற்கு அது இடையூறாக இருக்கிறது. அத்தகைய ஒரு பிழைப்பு அவர்கள் சீல-த்தைத் தகர்க்கத் துணைபோகிறது. அத்தகைய ஒரு தொழில் தவறான தொழில் ஆகும்.

ஒருவர், தான் எந்த விலங்கையும் கொல்வதில்லை என்கிறார். ஆனால் அவர் மாடுகளையும் - ஆடுகளையும் செம்மறி ஆடுகளையும் - வளர்க்கிறார். அவற்றுக்கு நன்றாகத் தீனி போட்டுக் கொழுக்கச் செய்து, பின் கசாப்புக்கடைக்காரரிடம் விற்கிறார். அதற்காகப் பணம்

வாங்கிக்கொண்டுவிட்டு, "இப்பொழுது எல்லாம் அந்தக் கசாப்புக்கடைக்காரரின் கையில் இருக்கிறது. அவர் அந்தக் கால்நடைகளைக் கொன்றால் நான் என்ன செய்ய முடியும்?" என்று கூறுகிறார். இது எப்படி ஒரு சரியான வாழ்வாதாரமாக இருக்க முடியும்? ஒரு குறிப்பிட்ட நபர், தான் மயக்கமளிக்கும் பொருட்கள் எதையும் உட்கொள்ளுவதில்லை என்று கூறுகிறார்; ஆனால், மயக்கமளிக்கும் பொருட்கள், மது மற்றும் அபின், கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்கிறார். அவரிடமிருந்து இவற்றை வாங்கும் எந்தவொருவரும் தம் சீல-த்தைத் தகர்க்கவே செய்கிறார். பின், இது தவறான பிழைப்பு ஆகாதா என்ன? ஒரு குறிப்பிட்ட நபர் விஷத்தை விற்று பிழைப்பு நடத்துகிறார். அதை வாங்கும் எந்தவொருவரும் எவரையேனும் கொல்லவே செய்கின்றனர். எனவே, மக்கள் ஒழுக்க நெறி மீறுவதற்குத் தூண்டுகோலாக தமது தொழில் இருக்கிறதா என்று ஒவ்வொருவரும் தம்மைத்தாமே ஆராய வேண்டும். அப்படி இருந்தால், அந்தத் தொழில் ஒரு நேரியத் தொழிலாகக் கண்டிப்பாக இருக்க முடியாது.

மிக உயர்ந்த தொழிலாக இருப்பினும், அதில் ஈடுபட்டிருக்கும் நபரின் மனநோக்கைத் தெரிந்துகொள்ளுதல் மிக முக்கியமானது ஆகும். தொழில் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், அவரது மனநோக்கு நல்லதாக இல்லாவிட்டால் அது நேரியத் தொழில் ஆகாது; நல்ல மனநோக்கோடு இணைந்திராவிட்டால் அது நேரியத் தொழில் ஆகாது. பிழைப்புக்கான ஆதாரத்தின் பின்னால் என்ன மனநோக்கு உள்ளது? அது மிக முக்கியம்.

சுமார் நாற்பது-நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் - நான் தூய தம்மத்தைப் பற்றிக் கேள்விப்படுவதற்கு முன்னால், நான் விபஸ்ஸனா முறையைக் கற்றுக்கொள்வதற்கு முன்னால் - என் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவம். என் குடும்பத்தில் ஒருவர் உடல் நலமின்றி இருந்தார். எங்கள் குடும்ப மருத்துவர் விடுமுறையில் இருந்ததால், நான் வேறு ஒரு மருத்துவரைக் கூட்டிவரச் சென்றேன். அவர் வேலைப்பளு மிகுதியானவர் என்பது எனக்குத் தெரியும். அதனால், அவர் நோயாளியின் வீட்டிற்கு சென்று பார்ப்பதற்கு இயலாது என்று நினைத்தேன். ஆனால், நான் அவரது மருத்துவமனைக்குச் சென்றபொழுது, அவர் வேலையின்றி அமர்ந்திருந்தார். அங்கு நோயாளிகள் எவரும் இருக்கவில்லை. நான் என் ஆவலை அடக்கமுடியாமல், "மருத்துவர் ஐயா! உங்கள் மருத்துவமனையில் பொதுவாக எப்பொழுதும் நோயாளிகளின் கூட்டம் நிரம்பியிருக்குமே. இன்று எதனால் நோயாளிகள் எவரும் வரவில்லை?" என்று கேட்டேன். அவர் சோகமாக முகத்தை வைத்துக்கொண்டு, "வழக்கமாக இந்த பருவத்தில் ஊருக்குள் ஏதேனும் ஒரு தொற்றுநோய் பரவியிருக்கும்; என்ன காரணத்தினாலோ இந்த வருடம் எந்தத் தொற்றுநோயும் பரவவில்லை" என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் நான் அதிர்ந்து போய், "மேலும் மேலும் மக்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டிய ஒரு மருத்துவர் இவர்; என்றாலும், இவர் மேலும் மேலும் மக்கள் நோயுற வேண்டும் என்று நினைக்கிறார். என்ன மருத்துவரோ இவர்?" என்று நினைத்தேன். நான் மிகவும் வருத்தமுற்றேன்.

காலப்போக்கில், நான், தம்மத்தின் தூய சாரமாக விளங்கும் இந்த அருமையான விபஸ்ஸனா தியானமுறை கிடைக்கப்பெற்றேன். அதற்கு முன்னர் தம்மம் என்ற பெயரில் சில புத்தகங்களை மட்டுமே படித்திருந்தேன். தம்மவழியில் நடப்பது வெகுதூரத்தில் இருந்தது. தூய தம்மம் என்றால் என்ன என்று எனக்குத் தெரியவில்லை; தம்மத்தை நான் புரிந்துகொண்டிருக்கவில்லை. தூய தம்மத்தை நான் உண்மையாகவே கண்டறிந்து எனக்குள்ளே நான் ஆராய ஆரம்பித்தபொழுது, உண்மை தன்னைத்தானே வெளிப்படுத்திக்கொள்ளத் தொடங்கியது.

நான் ஒரு வணிகனாக இருந்தவன்; ஒரு வணிகரின் குடும்பத்தில் பிறந்து, வணிகனாகப் பணிபுரிந்தவன். எனவே, இன்றும், வணிகர்களின் மனதை நான் நன்றாக புரிந்துகொள்ள இயலும். ஓர் உலக-யுத்தம் நடைபெறுவதினாலோ அல்லது எங்காவது பஞ்சம் ஏற்பட்டதாலோ நுகர்வோர்க்கான பொருட்களின் உற்பத்தி குறைந்துபோய், அவற்றின் விலைகள் ஏறி வானளாவ உயர்ந்துபோனால், வணிகர்கள் தங்கள் வணிக-மொழியில், "தொழிற்சந்தை முன்னேற்றம் அடைகிறது" என்பார்கள். அவர்களுக்கு, தொழிற்சந்தை முன்னேற்றம் அடைகிறது. மக்கள் இன்னல்களைச் சந்திப்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. "நான் நிறைய பணம் சம்பாதிக்கிறேன்; எனவே தொழிற்சந்தை முன்னேற்றம் அடைகிறது," என்று நினைப்பார்கள். யுத்தம் முடிந்து, பஞ்சம் தீர்ந்துபோய், நல்ல அறுவடை கிடைத்து, அனைத்தும் தாராளமாகக் கிடைக்கும் நிலை ஏற்பட்டு, நுகர்வோர்க்கான பொருட்களின் விலை இறங்கும்பொழுது, வணிகர், "தொழிற்சந்தையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது" என்று வருத்தம்-தோய்ந்த குரலில் சொல்வார்கள். இதுவே சில வணிகர்களின் மனப்பாங்கு. வணிகம் செய்வதில் தவறு ஏதும் இல்லை. ஒவ்வொரு நுகர்வோர்களும் உற்பத்தியாளரிடம் போய் தனக்கு வேண்டுவனவற்றை வாங்க முடியாது. உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களைப் பெற்று நுகர்வோரிடம் வழங்குவதே வணிகரின் வேலை. இந்த முயற்சிக்காக அவர் இலாபத்தில் தனக்குத் தகுந்த பங்கை எடுத்துக்கொள்கிறார். இதிலும் தவறு ஏதும் இல்லை. ஆனால் அவர் மனப்பாங்கும், உள்நோக்குமே மிக முக்கியமானவை. ஒருவர் தமது பிழைப்புக்காக வேண்டி, அவர் சீலத்தைக் கடைப்பிடிக்கிறாரா இல்லையா என்பதை அளக்க ஒரே அளவுகோல் இதுதான். மேற்போக்காக பார்த்தால், ஒருவரது பிழைப்பு, ஒருவரது தொழில், சரியானதாகவே இருந்தாலும், அவர் அதைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கவில்லை. அவர் அத்தொழிலைத் தவறான முறையில் செய்வதால், அது தூய்மையற்றதாகிறது. ஒருவர் ஒழுக்கம் நிறைந்தவராக ஆவதற்கு பதிலாக ஒழுக்கமற்றவராக ஆகிறார். இவ்வாறாக ஒருவர் தம்மைத்தாமே பரிசோதித்தவண்ணம் இருக்கவேண்டும்; ஒவ்வொரு படியிலும் தம்மைத்தாமே பகுத்தாராய்ந்தவண்ணம் இருக்கவேண்டும்.

கடந்த 2500 ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து தொலைந்துபோயிருந்த இந்த விபஸ்ஸனா தியான முறை, 1969 முதல் இந்தியாவிற்குத் திரும்பி வந்திருக்கிறது. இந்தியா முழுவதும் முகாம்கள் நடைபெற ஆரம்பித்துள்ளன. தம்ம கங்கை தோன்றிய நாட்டில் மீண்டும் பெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளது. அனைத்து வகுப்பினரும், அனைத்துவகையான தொழில்புரிவோரும், அனைத்துச் சமூகத்தினரும், அனைத்துப் பிரிவைச் சேர்ந்தவரும் விபஸ்ஸனா முகாமில் பங்கேற்க வருகிறார்கள். அவர்கள் கண்டிப்பாக வரவேண்டும். என்ன இருந்தாலும், இது தம்ம கங்கை. யார் வந்தாலும், அவர்கள் தாகம் தணிக்கபடுகிறது. நீரைக் குடிப்பவர் தம்மைத்தாமே இப்பெயரிட்டு அழைத்துக்கொள்கிறாரா அப்பெயரிட்டு அழைத்துக்கொள்கிறாரா, அல்லது இந்தப்பிரிவைச் சேர்ந்தவரா, அந்தப்பிரிவைச் சேர்ந்தவரா என்றெல்லாம் தம்ம கங்கை கவனிப்பதில்லை. யார் அதைக் குடித்தாலும் அவர்தம் தாகம் தணிக்கப்படுகிறது. எனவே மக்கள் வருகிறார்கள். வணிகம் செய்யும் வகுப்பினரும் என்னிடம் வந்து தம் பிரச்சினைகளை எடுத்துக் கூறுகிறார்கள். "நாங்கள் என்ன செய்வது? இது நாடு முழுவதும் சந்திக்கும் சூழ்நிலை; இது அரசாங்க கட்டுபாடுகள் உள்ள தேசம். நாங்கள் வியாபாரத்தை நேர்மையுடன் நடத்திச் செல்ல வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் நாங்கள் என்ன செய்வது? எல்லா இடங்களிலும் ஊழல்கள் நிலவுகின்றன; நாங்கள் எப்படி நேர்மையாக இருக்கமுடியும்?" நாடு ஒரு மிக மோசமான சூழ்நிலையைச் சந்தித்து வருவதை நானும் பார்க்கிறேன். வணிகம் செய்யும் வகுப்பினர் ஊழல் புரிகின்றனர். நாட்டை நிர்வகிக்கும் அலுவலர்களும் ஊழல் புரிபவர்களாகவே இருக்கிறார்கள். நாட்டுத் தலைவர்களும் ஊழல்வாதிகளாகவே உள்ளனர். அனைவரும் அவ்வாறு இல்லை, ஆனால் பெரும்பான்மையினர் ஊழல் செய்பவர்களாகவே இருக்கிறார்கள். எனவே, என்ன செய்ய இயலும்? "இவ்வளவு ஊழல் இருந்தபோதிலும், நீங்கள் குறைந்தபட்சம் இதைச் செய்யமுடியும். உங்கள் வருவாய் நுகர்வோர்களின் சட்டைப்பையிலிருந்து வருகிறது என்பதையாவது புரிந்துகொள்ளுங்கள். எனவே, உங்கள் பயனீட்டாளரே உங்களுக்கு உணவு அளிக்கும் எஜமானர் ஆவார்.

RNI TC NO: TNTAM 17399 / 26.03.07 RDIS NO: 126/07 RNI No. TNTAM / 2007 / 22647 POSTAL REG NO: TN/CH©/140/08-10

எனவே, தவறியும்கூட உங்கள் எஜமானரை ஏமாற்றாதீர்கள். நீங்கள் எந்தப் பொருளை அவருக்குக் கொடுத்தாலும் அதன் தரத்திலோ, எண்ணிக்கையிலோ, அளவிலோ, எடையிலோ அவரை ஏமாற்றாதீர்கள். கலப்படம் செய்யப்பட்டப் பொருளை எவருக்கும் கொடுக்காதீர்கள். இந்த அளவு உங்களால் செய்ய முடியும், இல்லையா?" என்று நான் வணிகம் புரிபவர்களுக்கு விளக்கம் தருகிறேன். குறைந்தபட்சம் இந்த அளவிற்காவது தம்மத்தைக் கடைபிடியுங்கள். தம்ம பாதையில் குறைந்தபட்சம் ஓரடியாவது எடுத்து வையுங்கள். பின்னர், நீங்கள் செல்வம் ஈட்டலாம். பொருளீட்டுவது தவறானது அன்று. இல்லறத்தில் வாழும் ஒருவர் பிறரிடம் பணத்திற்காகக் கையேந்தக் கூடாது. இல்லறம் வாழும் ஒருவர் செல்வத்தை முழுமையாக இழப்பது என்பது, துறவு கொண்ட ஒருவர் பணம் சேர்த்து வைப்பதைப் போன்றே தவறானது ஆகும். அவர் தன் சுயமுயற்சியால், நேர்மையான முறையில் செல்வத்தைச் சம்பாதிக்கவேண்டும். ஆனால் செல்வம் வரும்பொழுது, அகந்தையும் இயல்பாகவே வளர்கின்றது. "பார், நான் இந்தச் செல்வத்தைச் சம்பாதித்துள்ளேன்; நான் எவ்வளவு திறமைசாலி!" என்று அகந்தை பெருகி, ஒருவர் விடுதலைநிலையிலிருந்து பெரிதும் விலகிச் செல்கிறார். இந்த அகந்தையை ஒழிக்க, ஒருவர் தன் தேவைக்கு அதிகமான செல்வத்தின் ஒரு பகுதியைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஒருவர் அதிகமாகச் சம்பாதித்தால், சமுகத்திற்கு அதிக அளவில் திருப்பி அளிக்க வேண்டும்; ஒருவர் குறைவாகச் சம்பாதித்தால், சமுகத்திற்கு குறைந்த அளவில் திருப்பி அளிக்க வேண்டும். இது, தனது வருவாயின் ஒரு பகுதியைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் கடமை என்று பழங்கால மொழியில் சொல்லப்பட்டு வந்தது.

எனவே, இல்லறத்தார் ஒருவர் இந்த இரண்டு விஷயங்களையும் தெரிந்துகொண்டால், அவர் ஸம்மா-ஆஜிவோ கைகொள்ளத் தொடங்கிவிட்டவர் ஆவார். அவர் முன்னேறிக்கொண்டே இருப்பார். ஸம்மா-வாசா, ஸம்மா-கம்மந்தோ, ஸம்மா-ஆஜிவோ ஆகிய மூன்றும் இருந்தால், புனித எண்வழிப்பாதையின் முதல் பிரிவாகிய சீல பிரிவு மேலும் மேலும் வலுவடைந்து வருகிறது என்று ஒருவர் புரிந்துகொள்ளலாம். மேலும் முன்னேறிச் செல்லும் ஒருவர், புனித எண்வழிப்பாதையின் பிற இரண்டு பிரிவுகளையும் வலுப்படுத்தி, அதன் பயன்களை - நிறைந்தப் பயன்களைப் - பெறுவார். தூய தம்ம பாதையில் நடக்கும் ஒருவர், மகிழ்ச்சி-நிறைந்த, அமைதி-நிறைந்த, விடுதலை-நிறைந்த வாழ்க்கை வாழ்வார் என்பது உறுதி.

**அனைத்து உயிரினமும் மகிழ்வோடு இருக்கட்டும்**

**விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது**
**533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை,**
**திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, ☏: 044-24780953**

| மாதம் | 10 நாள் முகாம் | | ஸதிபட்டான முகாம் (S.T.P.) | 3-நாள் முகாம் | சிறுவர் தியான முகாம்கள் |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் - 08 | 7-28 ஆகஸ்ட் இருபது நாள் முகாம் | | | | 30-31 |
| செப்டம்பர் - 08 | 04 - 15 | 18-29 | | 18-21 | - |
| அக்டோபர் - 08 | 02-13 | 16-27 | 04 - 12 | 16-19 | - |
| நவம்பர் - 08 | 06-17 | 20-1/12 | | 20-23 | - |
| டிசம்பர் - 08 | 04-15 | 18-29 | | 18-21 | - |

தமிழகத்தின் மற்ற ஊர்களிலும், புதுவையிலும் தனிப்பட்ட விபஸ்ஸனா மையங்கள் இல்லை. எனினும், பின்வரும் ஊர்களில் அவ்வப்பொழுது பொது இடங்களில் விபஸ்ஸனா முகாம்கள் நடத்தப்படுகின்றன. இவ்விடங்களில் முகாம் நடைபெறும் நாட்களைக் குறித்து பின்வரும் தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு அறியலாம்.

**திருமதி. விஜயலட்சுமி (பாண்டிச்சேரி) - 9940467453, திரு. பரத் ஷா (கோயமுத்தூர்) - (0422) 2472441, திருமதி. ரேணுகா மேத்தா (மதுரை) - (0452) 2641343**

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014.
Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER

Posted on:

PERIODICAL

POSTED AT EGMORE
RMS/1 (PATRIKA CHANNEL)

*To:*

அனுப்புநர்: Vipassana Meditation Centre
51 Chamiers Road, RA Puram, Chennai 600028
☏: 044-24780953
e-mail: info@setu.dhamma.org,
Website: www.vri.dhamma.org, www.setu.dhamma.org, www.tamil.dhamma.org